# இலங்கையில் யுத்த அரசியலுக்கு முன்னுரிமை, எட்டாத தொலைவில் அரசியல் தீர்வு


Refugees want to return to their houses,but fear for their safety

“**இவ்வருட ஏப்ரலில்** தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்துக்கு முன்னர் வன்னிப் புலிகளிடம் இருந்து கிழக்கு மாகாணம் பூரணமாக விடுவிக்கப்படும்”, என அண்மையில் இலங்கை ஜனாதிபதி சூழுரைத்திருக்கிறார். கிழக்கில் வன்னிப் புலிகளின் நிலைகள் மீது பாரிய இராணுவத் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ள வேகத்தைப் பார்க்கும்போது, எப்படியேனும் அதை நிறைவேற்றுவதில் அரசாங்கம் திடமாக இருப்பதுபோல் தெரிகிறது. மகிந்தவின் அரசாங்கத்தைப் பொறுத்தளவில் கிழக்கு மாகாணத்தை வன்னிப் புலிகளிடமிருந்து விடுவிப்பது இன்றைய கட்டத்தில் அவரின் அரசியல் இருப்புக்கு மிக அவசியமானதாகும். திடீரென ஒரு தேர்தலுக்கு போவதானாலும் சரி, சிங்கள மக்களிடையே தனது செல்வாக்கை பெருக்குவதானாலும் சரி, தனது கட்சிக்குள்ளும் வெளியிலிருந்தும் வரும் விமர்சனங்களை சமாளிப்பதற்கானாலும் சரி கிழக்கு யுத்த முனையின் வெற்றி அவருக்கு மிக மிக அவசியமானது என்பதில் ஐயமில்லை.

அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீங்கலாக கருணாவின் தலைமையில் இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உட்பட கிழக்கில் இயங்கும் ஏனைய சகல தமிழ் முஸ்லிம் கட்சிகள் அனைத்திற்கும்கூட அரசாங்கத்தின் இந்நடவடிக்கை மிகமிக இனிப்பானது என்பதிலும் ஐயமிருக்க நியாயமில்லை. கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரையிலும்கூட கடுமையான இராணுவ மோதல்கள் முடிவுக்கு வந்து தமது பிள்ளைகள் பலாத்காரமாக பிடிக்கப்படுவது முடிவுக்கு வரலாம் என்கின்ற நம்பிக்கை ஏற்படுவதற்கும் வாய்ப்புகளுண்டு. ஆனால் வன்னிப் புலிகளைப் பொறுத்தவரை இது மிகமிக பாதகமான விடயமாகும். எனவே எப்பாடு பட்டாவதும் கிழக்கில் தமது இருப்பை முழுமையாக இல்லாவிட்டாலும் பகுதியாகவேனும் தக்கவைத்துக் கொள்வதுதான் இன்று அவர்களின் ஒட்டுமொத்த அரசியல் இராணுவ செயற்பாடாக மாறியுள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது. அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது காரணம், கிழக்கு முற்றாகத் தமது கைகளில் இருந்து பறிபோவது அவர்களுக்கு பெரும் கௌரவப் பிரைச்சினையாகும். அத்துடன் அங்கு கருணாவின் தலைமையில், ஏனைய தமிழ் முஸ்லிம் கட்சிகள் கூட்டாக அதுவும் அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் ஏதாவது ஒருவகை நிர்வாகம் அமைந்து விடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அவ்வவாறு அமைந்து விட்டால் அது வன்னிப் புலிகளைப் பொறுத்தவரை மிகவும் பாரதூரமான தோல்வியாகும். அத்தகையை ஒரு நிர்வாகத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதன் தாக்கம் வடக்கு மக்களிடையே பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அது தமிழ் மக்களிடையே வன்னிப் புலிகளுக்கு மேலும் பாரிய அதிருப்தியை பெற்றுத்தரும்.

எனவே, கிழக்கில் சுமுக நிலை ஏற்பட்டு அங்கு எந்தவிதமான அபிவிருத்திப் புனரமைப்பு வேலைகள் நடப்பதை தடுப்பதே வன்னிப் புலிகளின் இன்றைய முக்கிய பணியாக இருக்கிறது. அதற்காக அப்பிரதேசத்தில் ஒரு படையணியை வைத்திருப்பதும் அவசியமாகிறது. இதன் காரணமாகவே கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகளை அவதானிந்து அங்கு மீண்டும் மக்கள் சுமுகமாக வாழ்வதற்காக புனரமைப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களை ஆராய்வதற்க்குச் சென்றிருந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் அடங்கிய குழுவினர் மீது இலக்கு வைத்து வன்னிப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அது மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலாகும். அத்தாக்குதலின் மூலம், கிழக்கு இன்னமும் உக்கிரமான இராணுவ மோதல் நிகழும் பிரதேசமாகவும், தமது பிரசன்னம் அங்கு பலமாக இருப்பதாகவும் வன்னிப் புலிகள் நிரூபிக்க முயற்சி செய்து, அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். ஆனால் அந்நிகழ்வைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் கிழக்கில் வன்னிப் புலிகளின் மீது கடுமையான தாக்குதலை


Men neither have fixed job nor steady income

தொடுத்திருப்பது அவர்களுக்கு பெரும் பாதிப்பைக் கொடுத்திருக்கிறது.

இரண்டாவது காரணம், கிழக்கு மகாணத்திலிருந்து புலிகளின் படையணிகள் முற்றாக கலைக்கப்பட்டுவிட்டால் இலங்கை அரசாங்கப் படைகள் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து வன்னியை

**எஸ். மனோரஞ்சன்**

நோக்கி தமது அடுத்த இராணுவ நகர்வுகளை ஆரம்பிக்கலாம். அவ்வாறு பெருமெடுப்பில் இராணுவ நடவடிக்கை சகல முனைகளில் இருந்தும் வன்னியை நோக்கி ஆரம்பிக்கப்பட்டால் வன்னிப் புலிகளால் அதற்கு முகம் கொடுக்க முடியுமா என்பது கேள்விக் குறியே. இதனால்தான், கிழக்கின் வாகரைப் பிரதேசத்தில் காடுகளில் மறைந்து இயங்கும் தமது படையணிக்கு வன்னிப் புலிகள் ஆயுத தளபாடங்களை கடல் மார்க்கமாக தொடர்ந்து வழங்க பெரும்பாடுபட்டு முயன்று வருகின்றனர். ஆனால் புலிகளின் இந்த முயற்சிகள் பலவும் கடந்த சில மாதங்களாக இலங்கை அரசின் கடற்படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளன.

வன்னியை நோக்கிய இராணுவ நகர்வுகள் நடத்தப்பட்டால், ஆனையிறவு மற்றும் பூநகரி


“I had a grinding mill in Kathiraveli. I spent a lot of money to buy the grinding machine to grind rice, grains, and chillie to earn an income. I could not bring the grinding machine with me, while fleeing. I do not know whether my grinding machine is stolen or still there” queries Damayanthini Ekamparam Suvendrarajah (29)

போன்ற முக்கிய கேந்திர நிலையங்கள் கைப்பற்றப்பட்டு, யாழ்ப்பாணத்திற்கான மாற்றுத் தரைவழிப் பாதையொன்றை மேற்குக் கரையோரமாக சங்குப்பிட்டி கேரதீவிற்கூடாக திறப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கசியத் தொடங்கியுள்ளன. தமது முக்கிய நிர்வாக மையம் அமைந்துள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளை பாதுகாக்கும் பெரும் பிரயத்தனத்தில் புலிகள் ஆனையிறவு பூநகரி போன்ற பகுதிகளை விட்டு வெளியேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் கருதப்படுகின்றது.

புலிகளுக்கு இப்பொது மங்கு சனி கடந்த ஆறுமாத காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ கள நிலைமைகளில் மட்டுமல்ல சர்வதேச தளதிலும் புலிகளுக்கு பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. உள்நாட்டில் எடுத்துக்கொண்டால், கிழக்கில் அவர்களுக்கு அடுத்தடுத்து எற்பட்டுவரும் தோல்விகளினால் பல பிரதேசங்களைவிட்டு அவர்கள் ஓட நேர்ந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வன்னிப் புலிகளின் அங்கத்தவர்கள் இயக்கத்தை விட்டு ஓடி சரணடைவது தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமுள்ளது. யாழ்ப்பாணத்தின் மீது வன்னிப் புலிகள் நடத்திய பல தாக்குதல்கள் தோல்வியில் முடிந்துள்ளன. தென்னிலங்கையில் புலிகளின் அரசியல் இராணுவ மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் பெருமளவில் முடக்கப்பட்டுள்ளன. வன்னிப் பிரதேசத்தின் மீது இராணுவம் பெருமளவில் தாக்குதல் தொடுத்தால் அதற்கு முகம் கொடுப்பதற்காக வீட்டுக்கு ஒருவரோ அல்லது இருவரையோ வன்னிப் பிரதேசத்தில் பலாத்காரமாக பிடிக்கும் நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது வேறு எங்கும் அவர்களால் ஆட்சேர்ப்பு நடத்த முடியாத நிலைமையே உள்ளது. உதாரணத்திற்கு அண்மையில் புலிகள் இயக்கத்தின் சங்கதி இணைய தளத்தில் “மாசி மாதம் வீர காவியமான மாவீரர்கள்” என புகைப்படங்களுடன் அறிவிக்கப்பட்ட 15 பேரில், 14 பேர் வன்னியைச் சேர்ந்த. பெரும்பாலும் சிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேவேளை சர்வதேச மட்டத்திலும் புலிகள் இயக்கமானது பெரும் பின்னடைவையே சந்தித்துள்ளது. முக்கியமாக அவர்களின் நிதி சேகரிப்பு பெருமளவு முடங்கிப் போய்விட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அல் கைதா உட்பட பல இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்குமிடையே தொடர்புகள் இருப்பதாக செய்திகளும் பிரச்சாரங்களும் உலவத் தொடங்கியுள்ளன. இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி புலிகள் இயக்கமே மிகப் பெருமளவில் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது நிரூபணமாகியிருக்கிறது. ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தப்படும் சிறார்படையினர் தொடர்பாக அண்மையில் பாரீசில் நடத்தப்பட்ட மாநாட்டின் போதும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வெளியிட்ட அறிக்கையின் மூலமும் இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கமானது மிகவும் கண்மூடித்தனமாக ஆயிரக்கணக்கில் சிறார்களை பலாத்காரமாக படையில் சேர்ப்பது சர்வதேச சமூகத்தின் முன் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுளளது. இது தொடர்பாக மிக விரைவில் புலிகள் இயக்கத்தின் மிது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகள் எந்நேரமும் மேற்கொள்ளப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வாறான இக்கட்டான சந்தர்ப்பங்கள் வரும்போது நிலைமைகள் பூசி மெழுகி சரிசெய்து, மீண்டும் சர்வதேச சமூகத்திற்கு தாம் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை உள்ளவர்கள் என்று எடுத்துக்காட்ட வல்லவராக இருந்த அன்ரன் பாலசிங்கம் இக்கட்டத்தில் இல்லாமல் போனதும், அப்பதவியை ஏற்றுக்கொள்ள அடேல் பாலசிங்கம் மறுத்து விட்டதும் வன்னிப் புலிகளுக்கு மிகப்பெரும் பின்னடைவாகும். புலிகளின் சகலவிதமான முரண்டு பிடிப்புக்களையும் தாங்கி, புலிகளுக்கு எதிரான பல்வேறு தரப்பினர்களின் கடுமையான விமர்சனங்கள் மற்றும் அவதூறுகளையும் தாங்கிக்கொண்டு புலிகள் பேச்சுவார்த்தை வழிக்குக் கொண்டுவர முயன்ற எரிக் சொல்ஹெய்ம் உட்பட நோர்வே அரசும் பெருமளவில் புலிகளை இயக்கத்தின் மீது நம்பிக்கை இழந்து, அவர்களை கைவிடும் நிலைக்கு வந்திருப்பது அவர்களுக்கு மற்றுமொரு பெரும் பின்னடைவாகும் இலங்கையில் தாங்கள் மேற்கொண்ட சமாதான முயற்சி தோல்வி எனவும், அத்தோல்விக்கான பெரும் பங்கை புலிகள் இயக்கமே ஏற்க வேண்டும் என்றும் நோர்வே அரசாங்கம் உத்தியோகப் பற்றற்ற விதத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் உட்பட இந்தியாவிடமும் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இப்போது மகிந்த அரசாங்த்தின் காட்டில் மழை மகிந்தவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை கடத்தல், காணாமல்போதல், கொலை உட்பட பல்வேறு மனித உரிமை மீறல்கள், மற்றும் ஊடகங்கள் மீதான பாரிய அச்சுறுத்தல் போன்ற அம்சங்கள் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதகமான நிலைமைகளே காணப்படுகின்றன. இருந்தாலும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மிக சாதகமான நிலைமை காணப்படுவதையும் மறுத்துவிட முடியாது. அதில் மிக முக்கியமானது புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா இந்தியா உட்பட பல தென்னாசிய நாடுகள் உதவ

தொடர்ச்சி - பக்கம்25